[1968 பிப்ரவரி 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வட ஆர்க்காடு பழம் பதனிடும் தொழிற்சாலையைப்பற்றி திரு. முருகையன் அவர்கள் துணை வினா கேட்பார்கள்.

திரு. எஸ். முருகையன் : அந்த இடத்தைப்பற்றிய தவறுகள் பற்றிய தகவல்கள் இருந்தால் சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம். சம்பந்தப்பட்ட இடத்தை வேறு யாரோ ஒருவரிடமிருந்து தப்பாக பத்திரத்தை எழுதி வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த இடத்தைச்சுற்றி காம்பவுண்ட் போடப்பட்டு, அங்கே கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் எல்லாம் அதை ஆட்சேபிக்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமாகத்தான் இந்த இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

குடி நீர் விநியோகத் திட்டங்கள்

*69 வினா.—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பஞ்சாயத்தில் பொது குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்போது துவங்கப்பட்டது ?

(உ) இத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா: (அ) குறிச்சி பஞ்சாயத்து குடி தண்ணீர்த் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 15,06,000.

(இ) இத்திட்டம் இன்னும் துவங்கப்படவில்லை.

(உ) இத்திட்டத்திற்கான விரிவான அமைப்புப் படங்களும், மதிப்பீடுகளும் தயாராகின்றன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, குறிச்சி பஞ்சாயத்துப் பகுதி கோவை நகரத்தையொட்டி ஐந்தாறு மைல்கள் தூரத்தில் இருக்கிற காரணத்தினால், குடி நீர் இல்லாது மக்கள் குடிநீருக்காக தாய்மார்கள் இரண்டு மூன்று மைல்கள் எல்லாம் நடந்து சென்றும், தொழிலாளர்கள் எல்லாம் சைக்கிளிலே சென்றும் தண்ணீர் எடுத்துப்போகக்கூடிய கடுமையான சூழ்நிலை அங்கே இருப்பதால், மேற்படி திட்டத்தை விரைவிலேயே நடைமுறைக்குக் கொண்டுவந்து மக்கள் பயன்படுத்தக் கூடிய முறையில் எப்பொழுது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.